மாணவர் பதிப்பக வெளியீடு:

நல்ல தீர்ப்பு

"திராவிட நாடு" ஆசிரியர்:
சி. என். அண்ணாத்துரை எம். ஏ.,
அவர்கள் பேச்சு

விநியோக உரிமை:
"முல்லைப் பதிப்பகம்"
பிராட்வே, :: சென்னை.
1946.

மெர்க்கெண்டைல் பிரஸ்,
2/45 முத்துமாரி செட்டித் தெரு
மண்ணடி : : : சென்னை.



சி. என். அண்ணாத்துரை எம். ஏ.,

[சென்னை மருத்துவக் கல்லூரி, தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் "நல்ல தீர்ப்பு" என்னும் பொருளைப் பற்றிச் சொற்பொழிவாற்றிய திராவிடர் தளபதி.]

முன்னுரை

ஆம்; இது நல்ல தீர்ப்புதான்; இருண்ட வீடு போன்று காட்சியளிக்கும் நம் திராவிடத்தின் இருள் அகற்ற, இது மிக நல்ல தீர்ப்புதான். பழமையைப் போக்கி, விதியை விரட்டி வீணரை வீழ்த்தி, மனிதனை மனிதனாக வாழும் வழிகாட்டி, இனக் கொலைக்குக் காரணமாகவுள்ள கலைகளைச் சுட்டுப் பொசுக்கி, அடிமை வாழ்வை அறுத்தெறிய வழி கோலும் இச்சிறு வெளியீடு, நாட்டிற்கு - இக்காலத்திற்கு - திராவிட மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒரு நல்ல தீர்ப்பாகவே விளங்குகிறது.

இந்த நல்ல தீர்ப்பை, திராவிடத்துக்கு நல்கிய தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ., அவர்கள் இருமொழியில் செந்நாப்புலவர் (Orator); மக்கள் மனம் திரும்பும் வண்ணம் சொற்பெருக்காற்றும் நாவன்மையும், உரைநடை இயற்றும் கைவன்மையும் இரு மொழிகளிலும் வாய்க்கப்பெற்றுள்ள ஒப்பிலா மணி.

இருண்ட வீடாகிக் கிடக்கும் திராவிடத்தில் வந்து புகுந்து கொண்டு ஆரியப்பழமை நாற்றத்தைப் பரப்பிவரும் துரிஞ்சல்களைத் துரத்தி, அரித்துவரும் கரையான்களை அகற்றி, பிளவுண்டாக்கிவரும் புல்லுருவிகளைப் போக்கி, திராவிடமக்களின் நாசத்துக்கு அடிப்படையாக உள்ள நஞ்சை உமிழ்ந்துவரும்

நச்சரவங்களை நசுக்கி, நாட்டின் நலியைப்போக்க வல்ல ஆண்மையாளராகிய தளபதி சி. என். அண்ணாத்துரை எம். ஏ., அவர்கள் மாணவரிடையே சொன்மாரி மூலம் நல்கிய இந்த நல்ல தீர்ப்பை மக்கள் ஒவ்வொருவரும் படித்துணர வேண்டும்.

இவ்வரிய நல்ல தீர்ப்பை நூல்வடிவாக்கி ஒழுங்கு படுத்தி முற்பதிப்பில் காணும் பிழைகளை நீக்கி, விடுபட்டிருந்த பல கருத்துக்களைச் சேர்த்து ஐந்தாம் பதிப்பு வெளிவருகிறது. இந்நூல் உருவாவதற் குறுதுணையாக அவ்வரும் சொற் பெருக்கைத் திரட்டித்தந்த தோழர் எம். நமசிவாயத் திற்கும் எம் நன்றி உரித்தாகுக.

மாணவர் பதிப்பகம்.

[தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் ஆண்டு விழா, செலையூர் மண்டபத்தில், தோழர் செ. கோவிந்தராவ் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, புலவர் திலகம், திராவிடத்தின் தலைமைத் தளபதி, தோழர் சி. என். அண்ணாத்துரை எம்.ஏ., அவர்கள் அருளியது இந்த நல்ல தீர்ப்பு. சென்னை வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழக வேண்டுகோட்கிணங்க இது நூல் வடிவில் வெளிவருகிறது.]

நல்ல தீர்ப்பு

தோழர்களே! நான் பேசப்போகும் "நல்ல தீர்ப்பு" ஆசிரியருக்கும் மாணுக்கருக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய தன்று. ஆனல், அது என்னைப்பற்றிய தீர்ப்பே ஆகும். தலைவரவர்கள் ஏதோ எனக்கு இங்குப் பேச 144 போடப் பட்டதாகச் சொன்னர்கள். ஆசிரியர்கட்கு என்னிடம் உள்ள அருசையோ அல்லது ஆத்திரமோ இதற்கு காரணம் அன்று; ஆனல் அவர்கள் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளாததே காரணமாகும். மேலும், நான் நாட்டிலே புது யுகப் புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட ஓர் இயக்கத்தோடு தொடர்பு கொண்டுள்ளேன். நான் ஒரு சமூகக் குற்றவாளி; சமூகப் பிரஷ்டனுகக் கருதப்படுகிறேன்; இவ்வாறு என்னைத் தூரத்தி லிருந்தே பார்த்துத் தீர்ப்பளித்து விட்டனர். என்னைப் பற்றி நீங்கள் தவருக அறிந்தீர்கள், அறிவிக்கப்பட்டீர்கள்; ஆனலும், இன்று நாம் ஒன்று கூடியுள்ளோம். ஊடலுக்குப் பின் கூடல்போல். ஆகவே, இளந்தோழர்கள் இன்று நான் கொண்டுள்ள கருத்துக்களைக் கேட்டு, செய்துள்ள-செய் கின்ற குற்றங்களைக் கேட்டு, அவற்றின் வாதப் பிரதிவாதங் களைக் கேட்டு, அவை சரியா தவரு என்று ஒரு நல்ல தீர்ப்பு வழங்கவேண்டும். அது எனக்காக அல்ல; உங்களுக்கு, உங் கள் நாட்டின் நலனுக்கு, உங்கள் நாட்டுச் சமுதாயத்திற்கு, நீங்கள் அளிக்கும் நல்ல தீர்ப்பாகும்.

எது நல்ல தீர்ப்பு?

தீர்ப்பு என்றல் பலவிதம் உண்டு. ஆண்டவன் அடி யார்க்கு அளிக்கும் தீர்ப்பு ஒரு விதம்; அரசன் குடிகட்கு அளிக்கும் தீர்ப்பு மற்ருெரு விதம்; சட்ட சபைத் தீர்ப்பு ஒரு தன்மையது; வலியோர் எளியோருக்கும், முதலாளிகள் தொழிலாளிகளுக்கும் அளிக்கும் தீர்ப்பு பிறிதொரு தன்மை யது. இவை யாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலு வர். ஆனல் தீர்ப்பு, காலத்திற்குத் தக்கவாறும், நிலைமைக் குத் தக்கவாறும், கருத்துக்குத் தக்கவாறும் மாறும்; மாறித்

தான் தீரும்; மாறித்தான் தீரவேண்டும். ஒரு காலத்திலே நல்ல தீர்ப்பு அல்ல என்று எள்ளி நகையாடப்படும்.

நம் நாட்டிலே பசுவின் கன்றைக் கொன்ற மகனைத் தேர்க்காலில் வைத்து மடித்தான் மனுநீதி கண்ட சோழன். இது அவனுக்கு, அவனது கருத்துக்கு, அக்கால நிலைமைக்கு ஏற்றபடி நல்ல தீர்ப்பு. ஆனால் அவ்விதம் செய்ய, இக்காலத் தந்தையர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் ஒருப்படுவார்களா? அந்தக் காலத்து நல்ல தீர்ப்பு இந்தக் காலத்திற்குப் பொருந்துமா?

கிரேக்க நாட்டிலே, பகுத்தறிவாளன் சாக்ரடீஸ் நாட்டிலே பகுத்தறிவை வளர்த்தான்; மக்கள்-நாட்டின் சாதாரண மக்கள்-ஒவ்வொருவர் உள்ளத்திலும் அழகு, சத்தியம், ஆண்டவன் முதலியவைகளைப்பற்றி ஒருவித உணர்ச்சியை எழுப்பி, உண்மையை உள்ளபடி உரைக்க ஊக்கினான். ஆனால், அக்கால உலகம் அவனுக்கு அளித்த தீர்ப்பு, அவனைச் சிறையிலே அடைத்துச் சிந்தனையைச் சிதைக்க முயன்றது; நஞ்சை நாவால் சுவைக்க வைத்து நமனுலகுக் கனுப்பியது; இதுவும் அப்போது நல்ல தீர்ப்பு தான்.

இங்கிலாந்திலே சுதந்தரத்தை நாடி உழைத்த பொயடிஷியா என்னும் மாதை உரோமானியர் மிகக் கொடுமைப் படுத்தினர். அது அவர்களுக்கு அப்போது, நல்ல தீர்ப்பே!

அரசனின் தெய்வீக உரிமை கொண்டாடிய சார்லஸ் மன்னன் தன் அரண்மனை முன்னிலையிலேயே தூக்கிலிடப் பட்டான். இதுவும் ஒரு நல்ல தீர்ப்பே.

பிரான்சிலே, நாட்டு மக்களை அடக்க உதவிய பாஸ்டில் சிறையை வீழ்த்தி, புரட்சியைப் போற்றி, நாட்டோர் நன்மையை நாடி, சீமான்களையும் பூமான்களையும் அதே பாஸ்டில் சிறையில் அடைந்தோரை-அங்கு தூக்கிலிட்டு நல்ல தீர்ப்பு செய்தது; அது ஒரு காலம்.

ஆனால் ரஷ்யாவிலே, மன்னன் முதல் மடாதிபதிகள் வரை மக்கள் நலனுக்கு மாறானோரை மட்டந்தட்டிச் சுட்டு

வீழ்த்தி, நாட்டிலே சமத்துவத்தை நிலைநாட்டிய புரட்சி வீரர்களைப் போற்றுதார் யார்? இது இக் காலத்திற் கேற்ற ஒரு நல்ல தீர்ப்பென அவர்கள் கருதுகின்றனர்.

நான் மறுமுறையும் கூறுகிறேன்; தீர்ப்பானது, காலத்தையும் தீர்ப்பளிப்போரின் நன்மையையும் தழுவியதாகவே இருக்கும்.

சான்றாக, ஆசிரியர்கள் என்னை அழைக்க அலட்சியம் செய்தது அவர்கள் நிலைக்கு, தன்மைக்கு, நல்ல தீர்ப்பாகலாம்; இது மாணவரின் நல்ல தீர்ப்புக்கு மாறாக இருந்திருக்கலாம். ஆனால் என்னைச் சரியாக அறியாமல் தீர்ப்பளித்தது நல்ல தீர்ப்பு என நான் கருதமாட்டேன்.

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் தீர்ப்பு எதுவானாலும் அதுதான் நல்ல தீர்ப்பு; நல்ல தீர்ப்பு நல்லவர்கள் செய்யும் தீர்ப்பாக என்றும் இராது. ஏனெனில், நல்லவர்கள் தீர்ப்பு என்றும் இரக்க முடையதாகவே இருக்கும்.

சமுதாயம் ஒரு வழுக்கு நிலம்

இன்றைய சமுதாயம் செல்லரித்து, சீர்கெட்டுச் சின்னா பின்னப்பட்டுச் சிதறிக் கிடக்கிறது. எனவே, இன்று நல்ல தீர்ப்பு, சமுதாயப் புரட்சி புரிந்து சமுதாயத்தையே உருக்கி வேறு அச்சில் வார்ப்பதாகத்தான் இருக்கும். இது புரட்சி வேகத்தால்தான் முடியும். இத்தகைய சமுதாயப் புரட்சியை இளந்தோழர்கள் ஈவு இரக்கமின்றி, மாறுதலுக்குக் கட்டுப்பட்டு நடத்த வேண்டும். மக்கள் மாறுதலை எதிர்த்து வாழ முடியாது. ஒன்று மாறுதலோடு ஒன்றி வாழ முடியும்; இன்றேல் மாறுதலோடு மோதி மடிய முடியும். இன்றைய சமுதாயம் வழுக்கு நிலம் போன்றது; வழுக்கு நிலத்திலே ஒருவன் எத்துணைக் காலம் விழிப்போடு நடக்க முடியும்? கனத்த காற்றடித்தால் அவன் வழுக்கி விழுவது திண்ணம். ஆகவே, அவன் வழுக்கு நிலத்தைச் செம்மைப் படுத்துவது தான் சிறந்த வழி; மாற்றி யமைப்பதுதான் மனத்திற்குகந்த மார்க்கம்; அதுதான் என்றும் வழுக்கி விழாதிருக்கும் வழி.

நம் நாட்டுச் சமுதாயம் சாதி வேற்றுமையினாலும், பொருளாதார மாறுபாட்டினாலும் செல்லரித்துக் கிடக்கிறது; மேலும் செல்லரித்துக் கொண்டே வருகிறது. தீண்டாதார் என்போரைச் சகல துறைகளிலும் சாதியின் பேரால், சமயத்தின் பேரால் என்றென்றும் தீண்டாதார் ஆக்கியுள்ளோம்; அடிமைப்படுத்தி யுள்ளோம். இது நல்ல தீர்ப்பா?

கவலையை மாற்ற முயலும் தோழருக்கு

இதற்குச் சில தோழர்கள், இந்த நிலை நம் நாட்டில்தான் உளதா? அமெரிக்காவிலே நீக்ரோவைப்பற்றி யில்லையா? என்று கூறி, மற்ற நாடுகளிலும் வேற்றுமை இருக்கத்தான் இருக்கிறது; அதுபோல நம் நாட்டிலும் இருக்கிறது எனக் கூறிக் கவலையை மாற்ற முயல்வர். ஆனால் அந் நாட்டுச் சமுதாயத்தைவிட இந்நாட்டுச் சமுதாயம் சிறப்பற்றுச் சீர்கேடுற் றிருப்பதேன்? இங்கு ஒரு சாதியான் மற்றொரு சாதியானைத் தொட்டால் தீட்டு; தலை முழுக வேண்டும். ஆனால், அன்று ஒருவரை யொருவர் வெட்டு, குத்து, அடி என்று ஆர்ப்பரித்த ஹிட்லரோ, சர்ச்சிலோ, ரூஸ்வெல்ட்டோ அல்லது அந்த நாட்டு மக்களோ சாதாரணமாக ஒருவரை யொருவர் தொட்டால் தீட்டு, தலை முழுக வேண்டும், மதம் மாசற்றது என மனம் பதைக்க மாட்டார்கள். அங்கு மக்கள் இனத்தவர் எல்லோருக்கும் மரியாதை. இங்கு, தில்லைத் திருத்தல ஜோதியிலே கலந்த நந்தன் காலம் முதல், அம்பேத்கார், வைசிராய் ஜோதியிலே கலந்த இன்று வரை ஒரே தீர்ப்பு, தீண்டாதே என்ற தீர்ப்பு. இது நல்ல தீர்ப்பா?

அமெரிக்காவிலே நீக்ரோ இயற்கையிலேயே அழகற்று அமைக்கப்பட்டான். அதை மாற்ற முடியாது. ஆனால் நம் நாட்டுச் சகோதரர்கள் யாவரும் நம்மைப் போன்றவர்களே என்பதை எவராலும் மறுக்க முடியுமா? அமெரிக்காவிலே நீக்ரோவரோடு உண்ணல், உறவாடல் உண்டு; கலப்பு மணம் உண்டு; கல்விக் கலை உண்டு. ஆனால் இங்கே?

அறிவுக்கு ஒவ்வாத அறம் அடாதது

நம் நாட்டுத் தலைவர்கள் ஆப்பிரிக்காவிலே, ஆப்பிரிக்கா

இடத்திலே வாழும் கடல் கடந்த கறுப்பரின் உரிமைக்காகப் போராடுவர்; ஆனால், இந்த நாட்டிலே பிறந்து, இந்த நாட்டிலே உழைத்து, இன்பமற்று, உணவு, உடை உறைவிடமற்று, வறுமையால் வாடி நலிந்து மெலிந்து நசிந்து, இந்த நாட்டிலேயே என்றென்றும் தீண்டாதவனாகவே மரிக்கும் தோழர்களைப் பற்றிக் கவனித்ததுண்டா? மேற்கண்ட அநாகரிகத்தின் அடிப்படையை அஸ்திவாரத்தை, ஆணிவேரை அறுத்தெறிய முற்பட்டதுண்டா? ஏன் இல்லை? இளந் தோழர்களே! இதுபற்றி நீங்கள் நல்ல தீர்ப்பளிக்க வேண்டுகிறேன். இன்றில்லா விட்டாலும் நாளை; நாளையில்லா விட்டாலும் நாட் பல கடந்தாவது, கல்லூரியை விட்டகன்ற பிறகாவது சிந்தித்து ஒரு நல்ல தீர்ப்பை அளியுங்கள்! அது மட்டுமல்ல! நல்ல தீர்ப்பை நாடும் சமுதாயமும் நலம்பெறும் முறையிலே வழங்க, வீழ்த்தப்பட்ட மக்களை விழிப்புற்று வீறுகொண்டெழுமாறு செய்ய, உங்கள் நல்ல தீர்ப்பால் உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ளுங்கள்! உங்களால் உழைக்க முடியாவிட்டாலும் ஊருக்கு உழைப் போராகிய எங்களை வீணே தடுக்காது வாளா இருப்பதே நீங்கள் நாட்டுக்கு நல்கக்கூடிய நல்லறமாகும். நாங்கள், எங்களைச் சகல கலாவல்லவர்கள் என்றோ, பண்டிதர்கள் என்றோ பறை சாற்றவில்லை. அறிவுக்கு அறம் என்று பட்டதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம். அல்லாததை அக்கணமே அடாதது என்று அறிவுறுத்துகிறோம். உதாரணமாக, திருமணக் காலங்களிலே பட்டப் பகலிலே, பகலவன் ஒளியிலே, நம்மவர் விளக்கு ஏற்றி வைக்கின்றனர். இந்த விளக்கு ஏன்? எதற்காக என்று கேட்கிறோம். ஆண்டவன் அளித்த அருணன், கடவுள் அளித்த கதிரவன் என்றுமுள்ள அணையா விளக்காய்த் துலங்கும்போது ஏன் இந்த விளக்கு என்று கேட்கிறோம். ஆனால் நாங்கள் இட்டதுதான் சட்டம் என்று சாத்திரம் பேசிச் சூத்திரம் செய்யவில்லை 'நம்பினால் மோட்சம், நம்பாவிட்டால் நரகம்' என்று பயங்காட்டிப் பந்தயத்திலே வெற்றி பெற விரும்பவில்லை. ஆனால் உங்கள் சிந்தனையைச் சற்று கிளறி விடுகிறோம் சிந்தித்துப் பாருங்கள் என்று. சீர் தூக்கிப் பார்த்து உங்கள் சொந்த முடிவுக்கு வாருங்கள்!

இனப்பற்று மிக்க இலக்கிய முண்டா ?

கடவுளே இல்லை என்றோ, கடவுள் இருக்கிறார் என்றோ நான் கூறவில்லை—அறிவோடு, ஆற்றலோடு கூடிய ஆபாசமற்ற கடவுள் இல்லை நமக்கு. இருக்கவில்லை நமக்கு என்று தான் கூறுகின்றேன். மாசு மருவற்ற மதம் இல்லை நமக்கு; இனப்பற்று மிகுந்த இலக்கியம் இல்லை நமக்கு; அன்பு தரும் அறிவூட்டும் சமுதாயம் இல்லை நமக்கு; மனிதர் மனிதத் தன்மையோடு வாழச் சுயேச்சை சுதந்திரம் இல்லை நமக்கு என்று தான் கூறுகிறேன்.

நமக்கிருக்கும் இலக்கிய மெல்லாம் ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோரின் அற்புத லீலைகளைப்பற்றியவைகளாகவும், ஆண்டவனின் பத்து அவதாரங்களை விளக்கும் அதிசய அநாகரிக அற்புதங்கள் நிறைந்தவைகளாகவும், கலையின் பெயரால் இனக்கொலை செய்பவை களாகவுமேதான் இருக்கின்றன. அறிவுக்குப் பொருந்தாமல், ஆராய்ச்சிக்கு நிற்காமல், அறிவைபே அகற்றி மடமையை மக்கள் மனத்திலே புகுத்தும் போலிகளாகவே இலக்கியங்கள் உள்ளன.

கயமைத்தனமான கடவுள்

கிறிஸ்தவனுக்கோ ஒரே ஒரே பிதா பரமண்டலத்திலே உண்டு. இஸ்லாமியனுக்கோ ஒரே கடவுள்; அதுவும் உருவமற்ற அரூபி. ஆனல் நமக்கோ, மூலக்கடவுளர் மூவர். அவருக்குக் குடும்பங்கள் பல; அதிலும் நிரந்தரக் குடும்பங்கள் சில; தற்காலிகக் குடும்பங்கள் பல; சந்ததிகள் சாற்றுதற்கரியன; அவதாரங்கள் அளவிறந்தன. உதாரணமாக, சிவனுக்குப் பார்வதியும், கங்கையும் நிரந்தரக் குடும்பங்கள், தற்காலிகக் குடும்பங்களோ தாருகாவன ரிஷி பத்தினிகளைப் போல் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இருக்கும். ஏன் இதைக் கூறுகிறேன்? நமக்கும், கிறிஸ்தவனுக்கும், இஸ்லாமியனுக்கும் கடவுள் உணர்ச்சியின் தன்மையில், உள்ள வேற்றுமையைக் காட்டத்தான்; நம்முடைய கடவுட்டன்மை கயமைத்தனமாக உள்ளது; கபோதித்தனமாக உள்ளது என்பதை உறுத்திக் காட்டத்தான். இவ்விதக் கயமைத்தனத்தையும் கபோதிக் குணத்தையும் விடுத்து, கடவுளை, சர்வ

வியாபகன், உருவமற்ற அரூபி, அருளுடையவன் என்று மட்டும் ஏன் கூறலாகாது? இதற்குப் புராணமேன்? மதம் ஏன்? மக்களிடையே மாற்றம் (சாதி பேதம்) ஏன்? கடவுளைப்பற்றிய இந்தத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா நவிலுங்கள் நாட்டாரே !

அரன் அருள் அரைக்கணத்தில் !

நமக்குக் கடவுள் வேண்டும்; நல்ல கடவுள் வேண்டும்; அறிவுக்குப் பொருத்தமான, ஆராய்ச்சிக்குட்பட்ட, நிகண்டிலே நீசத்தன்மையற்ற கடவுள் உணர்ச்சி வேண்டும் என்று தான் கூறுகிறேன். நல்ல தீர்ப்பு அளிக்கும் கடவுள் வேண்டும். இங்கே ஒன்று கூற ஆசைப்படுகிறேன். சிலர் கூறக் கேட்டிருக்கிறேன்; சிவன் பார்ப்பன ரல்லாதாருக்கே உரித்தானவர் என்று; அவர்களையே அவர் உயர்வாக மதித்தா ரென்று; காரணம்,- கண்ணப்பரைத்தான்-பார்ப்பனரல்லாத ஒரு வேடுவரைத்தான்-எம்பெருமான் 'அப்பா! அப்பா!!' என்று அழைத்து அன்பு கூர்ந்தனராம். மற்றும் செட்டி குல நங்கையாகிய காரைக்கால் அம்மையாரைத்தான் 'அம்மே! அம்மே!' என்று தம் அமுத வாக்கால் அழைத்தாட் கொண்டாராம்; மற்றெவருக்கும் இப்பேறு கிடைக்க வில்லையே! என்னே நம்பால் நம் சிவனார் கருணை! என்று எண்ணி எண்ணி இறும்பூதெய்துகின்றனர். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே! கண்ணப்பர் அப்பா! என்ற அழைப்புப் பெறத் தம் கண்களைப் பெயர்த்து அப்ப நேர்ந்த கஷ்டத்தை! காரைக்கால் அம்மையார் அம்மே! என்ற ஆசிர்வாதம் பெற, பேயாகி உடலை வருத்தி, நாடி நரம்பற்று, உருக்குலைய நேர்ந்ததை; இப்பேறு பெற இவர்கள் பட்ட துன்பம் எவ்வளவு? ஆனால், அதே சிவனைப் பார்ப்பனர் எத்துணை எளிதில் அடைகின்றனர் என்பதைத் திருவிளையாடல் புராணத்திலே பாருங்கள்! பார்த்துக் கைலாயத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா என்று கூறுங்கள்! மதுரையில் சொக்கர் ஆலயத்தில் அம்மையும் அப்பனும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கின்றனர். திடீரென்று அப்பன் எழுந்தார். அம்மை கேட்க, ஒரு பக்தன் நம்மை நாடி வருகிறான்; அவனை ஆட்கொள்ள வேண்டும்! என்று விடைபெற்று அம்மையோடு விண்ணிலே சென்றார்.

அவனது பக்திக்கு மெச்சி, பக்தன் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம் கூறினர். அது என்ன? பொற்றாமரைக் குளத்திலே முழுகு! பசுவுக்கு அருகம் புல்லைப்போடு! ஆலயத்தை மும்முறை வலம் வா! நீ செய்த பாவம் தீர்ந்து எம்மை அடைவாய்! என்றார். பக்தன் அவ்வாறே செய்து பாபன் அருள் பெற்றான். எப்படிப்பட்ட பக்தன்! பஞ்சமா பாதகஞ் செய்த பக்தன்! தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்த பக்தன்; இப்படிப்பட்ட பக்தனுக்கு அரனின் அருள் அரைக் கணத்திலே கிட்டும்! ஏன்? - அவன் பார்ப்பனன். ஆனால் கண்ணப்பருக்கும், காரைக்கால் அம்மையாருக்கும் கடும் சோதனைகள்! இந்தக் கைலாயத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா? இது பக்திபாசாரத் தீர்ப்பா? அல்லது ஜாதிபாசாரத் தீர்ப்பா?

பெண்ணைத் திருடியவன் நம் கடவுள்!

கிறித்துவன் ஞாயிற்றுக்கிழமைகளில் கோவிலுக்குப் போவதிலே பொருளுண்டு. ஏனெனில், அவனுடைய இயேசுநாதர் அவனுக்காகத் தம் இரத்தத்தைச் சிந்தினர். அதிலே அவனுக்குப் பெருமை கூட, தனக்காக உயிர் துறந்த உத்தமனைக் காணச் செல்வதிலே.

முஸ்லிம் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகிறான் என்றால் அதுவும் அவனுக்குப் பெருமைதான். ஏன்? அவன் கடவுள் உருவம் அற்ற அரூபி. அவனுடைய வழி காட்டி முகம்மது நபி. மக்களுக்காக மக்காவிலிருந்து மதினா வரை ஓடினர்! அஞ்ஞானத்தை நீக்கி அறிவைப் புகட்டினர். ஆனால் நம்முடைய கண்ணன் காட்டிய வழியோ! சிறு வயதிலேயே வெண்ணெயைத் திருடி மத்தடி கொண்டான்; சற்றுப் பெரியவனானபோது கோபிகளுடனே பற்பல லீலைகள் புரிந்தான்; சேலைகள் திருடினான்; பின் ராதை, ருக்மணி முதலியோரை மணந்தான்; கடைசியாகப் பாரதப் போரிலே சிறந்த இராஜதந்திரத்தைக் கண்டான். நான்கு வருணத்தை நான்தான் படைத்தேன் என்று கீதை செய்தான். இந்த வழி நல்ல வழியா? இது நமக்குத் தேவையா?

மட்டையடிபடும் மாதவன்

அழகான கதைகளோடு, அற்புதங்கள் நிறைந்த புராணங்களோடு, இலக்கியங்களோடு கடவுளை ஒட்ட வைத்து, கடவுளுக்கும் கயமைத் தனத்தையும், கபோதித்தனத்தையும் கற்பித்து நாட்டிடை நல்குவது நல்லதா? உலகில் உள்ள விலங்குகள் எல்லாம் ஆண்டவனுக்கு அர்ப்பணம்! எருது-சிவனுக்கு! கருடன்-விஷ்ணுவுக்கு என்று போகும். மரங்கள் எல்லாமும் அப்படியே. வில்வம் சிவனுக்கு, துளசி-விஷ்ணுவுக்கு, வேப்பு மாரியம்மனுக்கு என்று போகும். அதுமட்டுமல்ல; ஆண்டவனுக்கு அழகான மோகினி ரூபம் முதல் அழகற்ற வராகம் வரை படைத்துள்ளோம். ஏன் இவ்விதம் கடவுளைக் கபோதித்தனமாகக் கயமைத்தன்மைக்கு உட்படுத்த வேண்டும்?

பாருங்கள், இன்று திருவரங்கத்திலே நடக்கிறது. மட்டையடித் திருவிழா? அன்று ஆண்டவன் அரங்கநாதன் அகாலத்திலே ஆலயத்திற்கு வருவார். கதவு மகாலட்சுமியினால் அடைக்கப்பட்டிருக்கும். பகவான் கதவைத் தட்டுவார். (பட்டாச்சாரி ரூபத்திலே) அம்மை உள்ளிருந்து சிறிது கதவைத் திறந்து (இன்னொரு பட்டாச்சாரி ரூபத்திலே) பார்த்து கணவன்மேல் சந்தேகப்பட்டுத் திறக்க மறுப்பார். உலகம் உண்ட மாதவன், உத்தமி லட்சுமியைக் கதவைத் திறக்க வேண்டுவார்; தாம் இனிச் சரிவர நடப்பதாகச் சத்தியம் செய்வார்; அம்மை வெளியே வந்து ஆண்டவனை மட்டையால் தட்டி உள்ளே அழைத்துப் போவார். இது எவ்வளவு மடத்தனம் என்று மனத்தில் சிந்தியுங்கள் மாணவர்களே! இவ் விழா ஒரு முறையல்ல; ஒன்பது முறையல்ல; ஒவ்வோராண்டும் நடைபெறுகிறது.

தூய கடவுளுணர்ச்சி பெற விரும்பும் நாம் இத்தகைய கயமைத்தனமான, காலித்தனமான, திருவிழாக்களைக் கடவுள் பேரால் கொண்டாட விட்டு வைப்பதுநல்லதா? அது கடவுளையே கயவனாக்குகிறதல்லவா? இவ்விதம் நடப்பது நல்ல தீர்ப்பா? மற்றும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிவகசிந்தாமணிபோன்ற செந்தமிழ் இலக்கியங்களைத் தமிழ்

நாட்டிற்கு அளித்து, அருளே வடிவாய் அருகனைத்தொழுத சமணர்களைச். சம்பந்தர் கழுவிலேற்றிய நாளை இன்றும் மதுரையில் திருவிழாவாகக் கொண்டாடுவதை நம் சைவ மெய்யன்பர்கள் கண்டு களித்து வருவது நல்லதா ? அவர்தம் திருவிழி இன்னும் விழிப்படைத்வில்லையா ? அவர்தம் அறிவு அஞ்ஞானத்தை விட்டு அகலவில்லையா ? ஒரு பக்கம் அன்பே சிவம் என்னும் ஆரவாரம். அதே சமயம், அன்புச் சமயத்தின் பேரால் அன்பற்ற, அறிவுக்குப் பொருந்தாத ஆஸ்திகத் திருவிழாக்களா ? அதிசயம் நிறைந்த அநாகரிகக் கதைகளா ? புராணங்களா ? சமரச சன்மார்க்க சமயங்கள், கடவுளர்கள் தழைத்தோங்க இவ்விழாக்கள், தேவையா ? தேவையில்லை ! அருளுடைய சமயத்திற்கு ' ஆண்டவனுக்கு ' இவை தேவையில்லை என்பது திண்ணம்.

சிறிய ஜன்னலால் போதிய காற்று கிடைக்காவிடில் அதை இடித்துப் பெரிய ஜன்னல் வைக்கிறோம். பாலம் பலமற்றதாக இருந்தால் அதை மாற்றிப் பலப்படுத்துகிறோம். ஜுரம் செந்தூரத்தினல் குணமாகா விட்டால் ஜெர்மன் மருந்துகள் உட்கொள்கிறோம். இதிலெல்லாம் பழமையைக் கண்மூடிக்கொண்டு கைப்பற்றுவதில்லை. அதுபோலவேதான் கடவுளுணர்ச்சியிலும் நமக்கு மாற்றம் வேண்டும்; மாற்றம் செய்தாக வேண்டும். நமக்கும் கிராமங்களிலே உள்ள மக்களுக்கும் இருக்கும் வித்தியாசங்களைக் கவனியுங்கள். நாம் எல்லோரும் பூமி உருண்டை வடிவம் என்று நன்றாய் அறிவோம். தந்தி, டெலிபோன், வயர்லெஸ் முதலியவைகளைப்பற்றி நன்ருய் அறிவோம்.

ஆனல் கிராமத்திலே சென்று கிராம மணியக்காரனைப் பார்த்து, பூமி உருண்டையா ? தட்டையா ? என்று கேட்டால், அவன் பூமி என்னமோ தட்டைதான், அது நம்ம பெரியவர்கள் எல்லாம்கூட எழுதி வைத்திருக்கிறார்கள். இரணியன் தம்பி இரண்யாட்சதன்கூடப் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போனனும். அதை மகாவிஷ்ணு பன்றியாகப் போய்த் திரும்பக் கொண்டு வந்தாராம். அதுதான் உண்மை என்று நம்ம அப்பர், அர்ச்சகர், புராணிகர் எல்லாம் சொல்லு

கிறார்கள். ஆனால் இப்ப என்னமோ நம்ம பையன் பூமி உருண்டை என்று படிக்கிறான். அதான் கிறிஸ்தவப் படிப் போல்லியோ! என்று பதில் சொல்வான். மேலும் அவனைப் பார்த்து, டெலிபோன் தந்தி, ரயில் ஓடுவது எப்படி. என் றெல்லாம் கேட்டால், அவைபற்றித் தனக்கு ஒன்றும் தெரி யாது என்பான். இவைகள் தற்கால வாழ்வுக்கு வேண்டி யவை; தெரிந்து நன்கு புரிந்துகொள்ள வேண்டியவை. ஆனால் தெரியுமா? என்று கேட்டால் தெரியாது என்பான். புரியுமா? என்று கேட்டால் புரியாது என்பான். இவ்வாறு தெரிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ளக் கூடியவை அவ னுக்குத் தெரியாது. ஆனால் அவனைப் பார்த்து, உலகம் எத் தனை என்றாலோ, பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம்,

நிலைமைக்கேற்ற நீதி

நரகலோகம், நாகலோகம் என்று பதில் சொல்வான். நம்ம ராஜா யார் என்றால், தெரியாது; எங்கோ சிமையில் இருக்கி றாராம் என்பான். ஆனால் தேவலோக ராஜா யார் என்றால், உடனே தேவேந்திரன் என்றும், எமனுக்கு என்ன வாகனம் என்றால், எருமைக்கடா என்றும், பூலோகம்-இது பாவலோகம், சுவர்க்கலோகம், சுகலோகம், நரகலோகம் அப்பா! பயங்கரம்! என்றும் பதில்கள் மிக வேகமாகக் கிடைக்கும். இப்படிப் பட்ட புரிந்துகொள்ள முடியாத அவசியமற்ற விஷயங்கள் அவனுக்கு அனுபவித்தவன் போல மனப்பாடம். ஆனால் அறிவு வளர்ச்சிக்கும், அன்றாட வாழ்க்கைக்கும் வேண்டியவற் றில் அவன் அரைக்கால் பலங்கூட அறிந்திருக்க மாட்டான். ஏன் இவ்விதம் நகரிலே ஒரு நீதியும், நாட்டிலே ஒரு நீதியும் வழங்கப்படுகிறது? இந்த நீதி வருணாச்சிர தருமம் வானுற வோங்கி வளம்பெற்றிருந்த காலத்தில், நல்ல தீர்ப்பாக இருந்தி ருக்கலாம்; இன்று இருக்க முடியுமா? மேலும், நீதி என்றும் நிலை பெற்றதா? நீதி நிலைமைக்குத் தக்கபடி மாறும்; நிகழ்ச் சிக்குக் கட்டுப்பட்டு நிற்காது. சான்றாக, ரயிலுக்குத் தாமத மாகச் செல்பவன் ரயில் தவறினால் ரயில் சீக்கிரம் போய்விட்ட தென்று குறை கூறுகிறான். அது அவன் நிலைமைக்கேற்ற நீதி. ஆனால் அதே ரயிலில் அரைமணி முன்னதாகச் சென்று

அமர்ந்திருப்பவன் அதைக் கட்டை வண்டிக்கும், கூட்ஸ் வண்டிக்கும் ஒப்பிடுகிறான். இது இவனது நிலைமைக்கேற்ற நீதி. ரயிலில் நிற்பவன் படுத்திருப்பவனைப் பார்த்து, எழுந்திரு என்கிறான். படுத்திருப்பவன் அடுத்த வண்டி பார் என்கிறான். இது அவரவர் நிலைமையில் அவரவர்கட்கு நல்ல நீதியாகும்.

கண்ணகி காலத்தில் கோவலன் நடந்தது நீதியாக இருந்திருக்கலாம்; ஆனால் அது இக்காலத்திற்குச் செல்லாது. இக்காலம் கண்ணகி கோவலனைச் சும்மா விடமாட்டாள்; அல்லது அவள் தாய் தகப்பனும் சும்மா விடார். அதுபோலத்தான் ராமன்-சீதை, நளாயினி, நளன்-தமயந்தி முதலியோர் காலத்து நீதி, அவ்வக் காலத்திற் கேற்றதாக இருந்தது. அது இப்போது செல்லாது. நீதியின் சக்கரம் சதா உருண்டு கொண்டே இருக்கும். அதனை நாம் அறிவைக்கொண்டு நம் நிலைக்கேற்பத் திருப்ப வேண்டும்.

காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற நீதி இருக்க வேண்டும்

கடவுளைப் பற்றிய நீதியும் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றபடிதான் இருக்க வேண்டும். அதிலும் ஒரு நல்ல தீர்ப்புக்கு வரவேண்டும். முற்காலத்திலேயே கடவுளைப்பற்றிய நீதி அவரவர் நிலைமைக்கு ஏற்றபடிதான் இருந்திருக்கிறது. சான்றாக, சைவர் தழைத்தோங்கத் தொண்டாற்ற வந்த சமயாச்சாரியர்களுள் ஒருவரான திருநாவுக்கரசரால் உருவம், நிறம் அற்றவனாகக் (இந்நிறத்தான், இவ்வண்ணத்தான் என்று எடுத்தியம்ப வொண்ணாதே) காணப்படும் கடவுளை, மற்றொரு சமயாச்சாரியாகிய, அம்மையின் அருட் பாலையுண்ட ஆளுடைய பிள்ளையாராகிய சம்பந்தர், தோடுடைய செவியனாக்கி, விடையேற்றி, தூவெண் மதிசூட்டி, காடுடைய சுடலைப் பொடி பூசி, உள்ளங்கவர் கள்வனாக்கிக் காண்கிறார். இதில் எவருடைய தீர்ப்பு நல்ல தீர்ப்பு? எல்லோருக்கும் ஏற்ற தீர்ப்பு? சிந்தியுங்கள்! இதில் எவருடைய தீர்ப்பைப் பின்பற்றுவது, கூறுங்கள்!

துறவறத்தைப்பற்றித் தாயுமானார் கூறும்போது, "கனியோ, காயோ, உதிர்சருகோ, கந்தமூலமோ, அதுவும் இன்றேல் நீரோ அருந்தி உயிர்வாழ்!" என்று கூறுகிறார். அவர் துறவியாகினும் முதலில் நினைப்பது நம்மைப்போலவே கனிதான். இதிலென்ன துறந்த தன்மை உளது? துறவறத்தைப்பற்றிப் பட்டினத்தடிகள், "இருக்குமிடந்தேடி என் பசிக்கு உருக்கமுடன் உணவு தந்தால் உண்பேன் இன்றேல் என் தேகம் இளைத்தாலும் ஏகேன், சிவன்மேல் ஆணை!" என்று மடாதிபதி மனப்பான்மையோடு பாடுகிறார். இதில் எந்தத் துறவறம் துறந்த நிலையில் உள்ளது?

எல்லாம்வல்ல எம்பிரானுக்குக் கூத்திகளேன்?

நமக்குக் கடவுளுணர்ச்சி வேண்டும், அது மாற்றி, அமைக்கப்பட வேண்டும், சுயமைத்தனமற்றதாக, கண் மூடித் தனமற்றதாக இருக்க வேண்டும். எல்லாம் வல்ல எம்பெருமானுக்குக் கோயில் ஏன்? குளம் ஏன்? குடும்பம் ஏன்? கூத்திகள் ஏன்? காணி ஏன்? பூமி ஏன்? மதம் ஏன்? சாஸ்திர சம்பிரதாயச் சடங்குகள் ஏன்? என்று கேட்கிறேன். இவைகளால் எவ்வளவு பணம் பாழ்! பகுத்தறிவு பாழ்! காலம் பாழ்! கருத்தும் பாழ்!

பொருளாதாரத் துறையில் கல்வி கற்கும் மாணவர்களே! உங்களுக்கு ஒரு வேண்டுகோள்! சிந்தியுங்கள்! உங்கள் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் சிந்தியுங்கள்! இந்தக் கோயில், மதம், சாஸ்திரம், சம்பிரதாயச் சடங்குகளின் பேரால் நாட்டு மக்கள் செய்யும் செலவு எவ்வளவு என்று; அது நாட்டின் சமுதாயத்திற்கு எவ்வித நலனுமின்றி எவ்விதம் நாசமாக்கப்படுகின்றது என்று; கோயில்களின் பேரால் எத்தனைக் கோடி பணம் முடங்கிக் கிடக்கிறது என்று; அதைக் கொண்டு எத்தனை எத்தனை பிர்லாத் திட்டம் போட்டு நிறைவேற்றலாம் என்று சிந்தியுங்கள்! சிந்தித்து, இவை சரியா என்று ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள்!

ஆண்டவனுக்கு ஆயிரம்வேலி, நிலம்!

நாட்டிலே நஞ்சை அதிகம். அதனால் ஆண்டவனுக்கு

ஆயிரம் வேலி நிலம். சரி, ஆனால் ஆண்டவனுக்காக அதே நிலத்தைப் பண்படுத்திப் பாடுபடும் பண்ணையாளுக்கு அந்தப் பரமசிவன் பாதி வயிற்றுக் கஞ்சி அளிக்கிறானா? இல்லை. ஏன்? தங்கம் விளையும் நாடு நந்தம் தமிழ் நாடு. ஆகவே தில்லைத் தாண்டவ மூர்த்திக்குத் தங்க ஓடுபோட்ட சன்னிதானம். சரி, ஆனால், பாறை வெடிப்புக்கும் மணலின் சரிவுக்கும் அஞ்சாது பூமியிலிருந்து தங்கம் வெட்டியெடுப்பவன் தொழிலாளி. அவன் அறிவானா தங்க நகை? அணிய வசதியுண்டா அவனுக்கு? அல்லது அரை வயிற்றுக் கஞ்சிக்காவது அலைச்சல் இல்லாமல் இருக்கிறதா? அதுதான் இல்லை. அவன் தன் குடும்பத்தை அரை வயிறாவது நிரப்ப என்றும் அலைந்தாகவேண்டும், அவனுக்குத்தான் எடுக்கும் தங்கத்தின் தரமும் தெரியாது; மதிப்பை அவன் மனத்தாலும் அறியான். அவன் பாடுபடுவதெல்லாம் சாண்வயிற்றின் அரை வயிற்றுக் கஞ்சிக்குத்தான். அவன் அறிந்ததெல்லாம் கந்தல் ஆடை, பொத்தல் குடிசை, இருண்ட வீடு, சுவையற்ற கஞ்சி, ஒட்டியவயிறு, குழிவிழுந்த கன்னம் முதலியவைகளே. நாட்டிலே பொன்னை அனுபவிப்பதில் அதை வெட்டி எடுப்போனுக்கும், எங்கோ இருப்போனுக்கும் ஏன் இந்த வேற்றுமை? ஏன் இந்த நிலைமை?

இயற்கையிலே இல்லாததல்ல நம் நாடு; நஞ்சை புஞ்சை மலிந்துள்ள நாடு நம் நாடு; ஜீவநதிகள் பெருக்கெடுத்தோடும் நாடு நம் நாடு; தங்கம் விளையும் நாடு நம் நாடு; இவ்வளவிருந்தும் இன்று கோடானுகோடி தோழர்கள் அன்ன ஆகாரமின்றி அல்லற்படுவது எதனால்? பல்லாயிர மக்கள் சிங்கப்பூருக்கும், ரெட்டானுக்கும், மலாய்க்கும் வயிறு வளர்க்கப் போவது எதனால்? இந்தத் தீர்ப்பு நாட்டிலே நடக்கும் தீர்ப்பு; இது நல்ல தீர்ப்பா? இந்த நிலைமைக்குக் காரணம் நம் நாட்டுச் செல்வம். மதத்திற்கும், சடங்கிற்கும், படைக்கும், கண்மூடிக் கபோதித் தனத்திற்கும் செலவிடப் படுவதேயாகும். நாட்டிலே மக்கள் உணவற்று, உடையற்று, இருக்க இடமற்று நிர்க்கதியாய் நிலவும்போது, ஏன் இந்தச் சாமிகளுக்கு

ஆயிர மாயிரம் வேலி நிலங்கள், பட்டு, பஞ்சணை பீதாம்பரங்கள், மயிர்ப் பீலிகள், கோட்டை கொத்தளங்கள் போன்ற கோவில்கள், திருவிழாக்கள், பொன், வெள்ளி, குதிரை, யானை சவாரிகள் என்று கேட்கிறோம். 3 லட்சம் 4 லட்சம் மதிப்புள்ள நகைகளை எப்படிச் சுமக்கின்றன இந்தத் தெய்வங்கள் என்று கேட்கின்றோம். சற்றும் நாணமின்றி, எப்படி நடமாடுகின்றன இந்தத் தெய்வங்கள் என்று கேட்பதில் குற்றமென்ன தோழர்களே? இதற்குமோர் நல்ல தீர்ப்பு நல்குங்கள்!

சமீபத்திலே நான் ஒரு பேசும் படக்காட்சியைப் பார்த்தேன். அதில் ஆங்கில நாட்டின் பெவின் திட்டத்திலே ஒரு பகுதியைச் செய்திப் படமாகக் காண்பித்தனர். அதில் ஒரு கையற்றவனுக்கு இரும்பிலே கை செய்து வைத்து மற்றொரு கையில் அரம் கொடுத்து அசைத்துத் தொழிற்சாலைகளிலே தொழில் செய்யக் கற்பிக்கின்றனர்; காலில்லாதவனுக்குச் செயற்கைக் கால்களை ஈடு செய்கின்றனர் தம் அறிவைப் பயன் படுத்தி.

ஆனால் நம் நாட்டிலோ! ஒரு மதவாதி தேறாட்டத்துக்குள் சென்று வயிறு புடைக்கத் தின்றுவிட்டு, வாயில் வெற்றிலை மென்று கொண்டே வெளியே வருவார். வெளியே, கையற்ற, காலற்ற, கண்ணற்ற பிச்சைக்காரர்கள் அவரிடம் ஒரு காலணா வேண்டுவர். அதற்காக அவரைச் சாமி என்பர்; மஹாராஜா நீ நல்லாயிருக்கணும் என்றும் புகழ்மாலை பாடுவர் ஆனால் அவர்கள் நிலைகண்டு அவர் இரங்கார்; தாங்கள் செய்த கருமத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள் என்று அவர் கருதிக்கொண்டு வழியே செல்வார்; அவர்கள் அங்கம் பழுதுபட்டிருப்பதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்; ஆனால் அதே மத வாதி கந்தக்கோட்டத்திலோ, ஏகாம்பர நாதர் கோயிலிலோ, மற்ற எந்தக் கோயிலிலோ உள்ள குதிரை வாகனத்தின் வாலோ, காளை மாட்டின் வாலோ, மயில் வாகனத்தின் தோகையோ ஒடிந்து விட்டதாகத் தெரிந்தால் அதற்காக மிக்க கவலைப்படுவார்; மனம் பதை பதைப்பார்; உடனே ஒரு திருவோலை எந்திக்கொண்டு வீடு வீடாக, ஊர்

ஊராக, நகரம் நகரமாகவேனும் சுற்றித் திரிந்து மக்களின் மடமையைத் துணைக்கொண்டு வாகனத்தைப் புதுப்பிக்கும் திருப்பணிக்காகத் திரவியம் சேர்த்து ஒடிந்த பாகத்தை ஈடு செய்வார். வாகனத்தின் வால் உடைந்தது என்று சொல்வது பிழை; ஆனால் உடைக்கப் பட்டுவிட்டது; உடைக்கப் பட்டு உருக்கி வேறு நகை ஆக்கப்பட்டு விட்டது என்பது தான் உண்மை உரை; உறுதிபுங்கூட, மக்கள் கை காலற்றிருப்பதைக் கண்டு கவலையுறார்; அவர் தம் விதியை இவர்தம் மதியால் மாற்ற முன்வரார். ஆனால் எல்லாம் வல்ல எம் பெருமானின் எருது வாகனம் பழுதுபட்டால் அதைப் புனருத்தாரணம் செய்யப் புறப்படுவார் புளகாங்கிதத்தோடு. என்னே இவர் மடம் இழிநிலை! இத்தகைய மக்கட் சமுதாயம் முற்போக்கடையுமா? அல்லது பெவின் திட்டப்படி கைகாலற்றோரைக் கருத்துடன் கவனித்து ஆவன செய்யும் நாடு முன்னேறுமா? நல்ல தீர்ப்பு அளியுங்கள் தோழர்களே! மக்களை மக்களாகக் கருதி மகேஸ்வரனுக்கு மண்டபங்கள் கட்டும் மக்கள் மடமையை விட்டு என்றுவது மதியைப் பெறுவார்களா? நம் உழைப்பு, ஊதியம், அறிவு, ஆற்றல், சிந்தனை, சிறப்பு, கருத்து, கல்வி யாவும் இனத்திற்கு இம்மியும் பயன் தராத இழிமுறையிலேயே சென்றால், இத்தாலி நாட்டைக் கண்டு டாண்டன் என்னும் கவி, ' எழிலுள்ள நாடே! எடுத்தாள்வோர் நாடானையே!" என்று இரங்கியதுபோல் நாமும் நம் நாட்டைக் கண்டு இரங்கத்தான் வேண்டும்.

எவர் கூற்றை நம்பி இலக்கியம் படிப்பது

நம் இலக்கியங்கள் நமக்குத் தேவையா? அவற்றால் மதி பெருகுமா? மடமை மறையுமா? என்று ஒரு நல்ல தீர்ப்புக்கு வரவேண்டும்.

புராண இதிகாசங்களைப் பாடும் இலக்கியங்களின் அவசியத்தைப் பற்றிக் கூறி, அவற்றைப் படிக்கவேண்டும் என்று பறைசாற்றினோர் யாவரும் வெவ்வேறு காரணம் கூறினர்; அதில் எதை நம்புவது? எதைப் பின்பற்றுவது? அதுதான் முடிவா? முதலாவதாக "அவை புண்ணிய சரித்திரங்கள்; அதனால் அவற்றை அறியவேண்டும்" என்றனர். இது திரு-

மறைமலையடிகள் காலமாகும். பின்னர் அவற்றில் உள்ள பாத்திரங்கள் சற்பாத்திரங்கள்; ஆகவே அவற்றைப் படிக்க வேண்டும் என்றனர். இது திரு. வி. கலியாணசுந்தரனர் காலம். அடுத்தபடியாக, "அவ்விலக்கியங்களிலே காவியரசம், கலை உணர்வு, பண்பாடுகள் சொட்டுகின்றன; அதனால் அவற்றைப் படிக்க வேண்டும் என்றனர். இது திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் காலமாகும். இதனை இன்னும் சிலர் வேறு மொழியிலே கூறுவர். அதாவது, அவைகளிலேயுள்ள பாவத்திற்காகப் படியுங்கள்! என்று திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் காலம். இவை யாவற்றையும் கடந்து மேலே கூறப்பட்டவைகட்காகப் படிக்கா விட்டாலும் அவைகளிலுள்ள நீதிகட்காகப் படியுங்கள்! என்கின்றனர். இது திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற புராணமும் பகுத்தறிவும் கலந்தோர் காலமாகும்.

பத்துத்தலை இராவணன் தத்வார்த்தம் பலிக்குமா

புண்ணிய சரிதம், சற்பாத்திரங்கள் நிறைந்த சரிதம், காவியரசம், கலையுணர்வு, பண்பாடு பொருந்திய காவியம், பாவமுள்ள காவியம் என்ற நிலைகளெல்லாம் கடந்து நீதிக் காகவாவது இவைகள் நிலைத்திருக்க வேண்டும் என்ற நிலைமைக்கு வந்துள்ளது இன்றைய இலக்கியங்களுடைய நிலை. மற்றும் சில பகுத்தறிவாளர் கேட்கும்போது மட்டும் இவர்கள் சில தத்துவார்த்தங்கள் கூறித் தகிடுதத்தம் செய்கின்றனர். இவர்கள் கூறும் தத்துவார்த்தம் நாட்டு மக்களிடைப் பரவியுளதா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அப்படியிருக்க இவர்கள் கூறும் தத்துவங்களால் யாருக்கு என்ன பயன்? சான்றாக, புலவர்கள், ராவணனுக்குப் பத்துத் தலைகள் இல்லை. அது கவியின் கற்பனைத் திறன்; ராவணன் பத்துப்பேர் ஆற்றலை உடையவன்; பத்துவித குணமுள்ளவன்; ஆகவே கவி அதனைப் பத்து முகங்கள் என்று பாடியுள்ளார். அதிலுள்ள பண்பாடு. பாவம் தான் என்னே! என்னே!" என்று இறும்பூதெய்துவர். நான் கேட்கிறேன் உங்களை; நீங்கள் கிராமத்திற்குச் சென்று கிராமத்தானிடம், "நாங்கள் படித்துப் பட்டம் பெற்றுள்ளோம்; செந்தமிழ்க் காவியங்களைக் கருத்தூன்றிக் கற்றோம்.

இதிகாசங்களை இலக்கிய ருசியோடு இணைத்து இன்புற்றோம். நாங்கள் சொல்கிறோம் இராவணனுக்குப் பத்துத் தலைகள் இல்லை. அது வெறும் கற்பனை; கருத்துக்குக் களிப்பூட்ட கவியினால் கையாளப்பட்ட கைத்திறன். எனவே, இராவண னுக்குப் பத்துத் தலைகள் இல்லை" என்று பறைசாற்றுவீர்களா? அவ்விதம் பத்துத் தலைகள் என்பது பிழை என்பது குறித்துப் பேசப் புகுந்த உங்களால் அவர்கள் கல்லடிகட்குப் பத்துப்போட முடியுமா என்றுதான் எங்குகிறேன்! ஏன்? எதனால்? அவன் உங்கள் பேச்சை நம்பாததனால் ஏன் நம்ப மாட்டான்? அவன் அறிந்தது, அறிவிக்கப்பட்டது பத்துத் தலைகள் என்றுதான். மேலும் அவன் வீட்டிலே படிப்பது பத்துத் தலைகள் என்று; புராணப் பிரசங்கத்திலே கேட்பது ராவணனுக்குப் பத்துத் தலைகள் என்று; நாடகத்திலே, சினிமாவிலே காண்பது பத்துத் தலைகள் என்று; எண்ணத்திலே ஊறியிருப்பது பத்துத் தலைகள் என்று அவன் உங்கள் சொல் கேட்டதும் தன் எண்ணத்தை மாற்றுவானா? அன்றி மறப்பானா? ஆகவே உங்கள் தத்துவார்த்தத்தால் என்ன பயன் என்று கேட்கிறேன். இவை மாற்றப் படவேண்டு மென்றால் அது குற்றமா? நீங்களே ஒரு நல்ல தீர்ப்புக் கூறுங்கள்.

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே

நமக்கு இலக்கியங்கள் வேண்டும்; எப்படிப்பட்ட இலக்கியங்கள்? காலத்திற்கும் கருத்திற்கும் தக்கதொடர்புள்ள இலக்கியங்கள் வேண்டும். "பார்ப்பானை ஐயரென்னும் காலமும் போச்சே, வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என்று காலத்திற்கேற்ற கருத்துடன் பாடிச் சென்றார் பாரதியார் அதைக் கண்டும் உங்கட்கு உண்மை தெரியவில்லையா? நம்முடைய இலக்கியங்களிலே உள்ள நீதி நமக்குத் தகுமா? நமக்குத் தேவையா? என்று ஒரு நல்ல தீர்ப்பு அளியுங்கள். எடுத்துக்காட்டாக கம்ப ராமாயணத்திலே உள்ள நீதியைக் காண்மின். இராமனுக்கு முடிசூட்டு விழா நிச்சயிக்கப்பட்டது. தசரதன் தன் மந்திரி சுமந்திரனை அழைத்து இராமனுக்கு அரச நீதிகளை அறிவுறுத்துமாறு ஆணையிட்டான். சுமந்திரன் இராமனுக்குக் கூறுகிறான்: "அந்தணர் ஏவுகின்ற முறைப்படி நட" என்று. இது இந்தக்

காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றதா என்று சிந்தியுங்கள். இந்தத் தீர்ப்பு நல்ல தீர்ப்பா ?

அந்தணரென்போர் யாவர் ?

இங்கு நம் புலவர் குழாங்கள் ஒன்று கூற முன் வருவர் மிக்க ஆவலுடன். அதாவது, "கம்பன் கண்ட அந்தணர் பார்ப்பனக் குலத்தைக் குறிப்பதல்ல. ஆனால் அந்தணரென் போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகலான்" என்ற திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாக உள்ள அறிவாளரையே அண்டும் என்பர் அந்தணர் என்னும் சொல் இங்கு அறிவாளரைக் குறிப்பதன்று; குலத்தைக் குறித்ததேயாகும் என்றே துணிதல் வேண்டும் எடுத்துக் காட்டாக வேண்டுமானால், சுந்தரர் பாடிய திருத்தொண்டர் திருத்தொகைக்கு வாருங்கள். அதிலே, "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்ற அடியிலே அந்தணர் என்பது நம் புலவர் பெருமக்கள் புகலும் புனித ரையே குறிக்கிறதா என்று பாருங்கள். இல்லை! அது குலத் தைத்தான் குறிக்கிறது என்பது முக்காலும் உண்மை அவ் விதம் குலத்தைக் குறிக்கவில்லை என்றால், அறிவாளராகிய தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று கூறிய அதே வாயால் அடுத்த அடியிலேயே "திருநீலகண்டக் குயவனார்க்கும் அடியேன்" என்று கூறிக் குயவனார்க்கு என்ற குலத்தைக் குறிக்கும் சொல்லை வைத்திருக்க மாட்டார். ஏன் ? அந்தணர் என்பது செந்தண்மை பூண்டொழுகும் செம்மல்களையே குறிப்பதானால், திருநீலகண்டரையும் அந்த ணர் என்று குறித்திருத்தல் வேண்டும் அவ்விதம் குறிக்காதது ஏன் ? அவர் அந்தணர் என்று அழைக்கப்பட அவ்வளவு அருகதையற்றவரா ? சிவநேசச் செல்வர் அல்லவா ? அம்மை யப்பனின் அருள் திருவிளையாடல் அவரை அண்ட வில்லையா ? இல்லை என்று எவரும் மறந்தும் மறுக்கமுடியாது. எனவே இங்கு அந்தணர் என்பது குலத்தைக் குறிக்கும் சொல் என்று கொள்வதே முறை.

நிற்க, சுமந்திரன் இராமனிடம், அந்தணர் ஏவுகின்ற முறைப்படி நட; என்னெனில், விதியும் அவர் ஏவலிற்கும்; அவரால் அரசை ஆக்கவும் அழிக்கவும் முடியும் என்று கூறு கிறான். இது நல்ல நீதியா ? நடக்குமா ? நடக்க விடலாமா ? என்று சிந்தியுங்கள் ! எதிர்கால நீதிபதிகளே !

கம்பன் காவியத்தில் காண்பது தமிழ்நாடுதானா?

பிறிதொரு புலவர், கம்பன் காவியத்திலே தமிழ் நாட்டைக் கண்டான் என்று கம்பன்பால் மாறாக்காதல் மிகக் கொள்கின்றார். ஆனால், தமிழ்நாட்டிலே கம்பன் கண்ட காட்சிகளிருந்தனவா? பாருங்கள்! கம்பன் காவியத்திலே மாதர் வர்ணனை மிக மோசம்; மனத்தாலும் நினைக்கொணாத மாசுடையது. மிதிலை அயோத்தி முதலிய நகரங்களிலே மாதர்கள் மது குடித்து வெறியால் தம் நிலைமறந்து ஆடிக்கொண்டிருந்தனர். பெண்கள் பந்தயம் வைத்துச் சூதாடினர். பந்தயத்தில் தத்தம் காதணி கையணி முதலிய யாவற்றையும் தோற்றபின் தத்தம் மேலாடைகளையும் பணயம் வைத்து ஆடுகின்றனராம்! இது தானா கம்பன் கண்ட தமிழ்நாட்டு மகளிர் மாண்பு? இத்தகைய இழிசெயல்கள் தமிழ் நாட்டிலே இருந்தனவா? இருந்தன என்று இயம்பப் பண்டை ஏட்டிலே இடம் உண்டா? அல்லது இத்தகைய தமிழ்நாடு நமக்கு வேண்டுமா? வேண்டும் என்று எவரும் விழைபார் என்பது திண்ணம்.

பக்திபாடலா? கொக்கோக வைபவமா?

மற்றும் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் மகாமோசம். மற்றெங்கும் காணமுடியாத காமரசக் களஞ்சியம். எல்லாம் பாரிஸ் நிர்வாணப் படங்களைப் பாடும் பாசுரங்களாகவே பரிணமிக்கின்றன. சான்றாக, "அருக்கு மங்கையர் மலரடி வருடி, கருத்தறிந்த பின் அரைதனி லுடைதனை அவிழ்த்து ஆங்குள அரசிலை தடவி" எனப் போகிறது. இவைகளை வேண்டாம் என விழைவோர் ஏன் இவைகளை விரித்துப் பாடவேண்டும்? இவைகள் பக்திப்பாடல்களா கொக்கோக வைபவம் என்று கூறினால் மிகப் பொருத்தமாக இருக்குமே! பக்திப் பாடல்களோடு காம உணர்ச்சியைத் தூண்டும் கருத்து மிக்க அடிகளை இணைப்பது நேர்மையா? அதற்குத் தனித்தனி இலக்கியங்கள் இருக்கவேண்டும்.

நமக்குக் காமரசம் கலவாத, மதம் கலவாத, மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும் கருத்துக்கும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை. "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்ற

மனப்பான்மை தேவை. அருளை மட்டும் கேட்கும் ஆண்டவன் தேவை. கோயில், குருக்கள், குடும்பம், கூத்தி, மானியம், அதிர்வெடி கேட்கும் ஆண்டவன் வேண்டாம் நமக்கு. கோயி லுக்கு வெளியே வறுமை, கொடுமை, இல்லாமை, கோயி லுக்கு உள்ளே மலைபோன்ற செல்வம். இன்பம், என்றிருக்கும் நிலையற்ற நிலைமை வேண்டாம் கடவுளுக்குப் பேசும் சக்தி யிருந்தால் அவர் உங்களைப் பார்த்து, அடே அறிவற்றவனே! நான் இந்த அண்ட சராசரங்களைப் படைத்தேன்; நிலத்தைப் படைத்தேன்; நெல்லைப் படைத்தேன்; நீரைப் படைத்தேன்; அதிலே முத்தைப் படைத்தேன்; அறிவைப் படைத்தேன் எதையும் எண்ணிச் செய்ய; பகுத்துச் செய்ய உனக்குப் பகுத்தறிவையும் படைத்தேன். ஆனால் இவற்றிற்குப் பதிலாக நீ எனக்கு அரை வீசை பொங்கல் படைக்கிறாயா? நாட்டிலே உள்ள நலிந்தோரைப் பார் என்றுதான் கேட்பார், அவர் அறி வுள்ள கடவுளானால்.

ஆண்டவனின் ஆலயத்திற்குச் செல்கிறார்களே, அங்கே அடியார் திருக்கூட்டங்களின் உரையாடலே ஒரு தினுசு. ஆஹா மூர்த்தியின் லக்ஷணமே லக்ஷணம், என்ன கம்பீரம்! என்ன ஆக்ருதி! பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும் என்று பரவசமடைவார் ஒருவர். அருகிலிருக்கும் இன் னொருவர், அம்மன் மட்டும் என்ன கெட்டுவிட்டதா? அதன் லக்ஷணத்தைத்தான் பாருமே! வைர மூக்குத்தியும், இரத்தினக் கண்டிகையும், தங்க ஒட்டியாணமும் தகதகவென மின்ன எப்படி ஜொலிக்கின்றன அப்பா! என்று மயிர்கூச்செறிவார். உம், எல்லாம் நம் குருக்களய்யாவின் சிங்காரிப்பிலே இருக் கிறது. அவர் சிங்காரிப்பே ஓர் அலாதி அழகு என்பார் பிறிதொருவர். மற்றும் சிலர், "அதெல்லாம் சரிதான், மூர்த்தி இந்தப் பழைய வாகனத்திலா எழுந்தருளுவது! இந்தக் குறை என்று தீருமோ! எந்த புண்யாத்மா இந்தக் கைங்கர்யத்தை ஈடேற்றுவாரோ" என்று ஏங்குவர். வேறு சிலர், "என்ன நம்ம இராஜரத்தினம் பிள்ளை நாதசுரம் வைத் திருந்தால் உற்சவம் வெகு ஜோராயிருக்கும். இவ்வளவு செலவு செய்தவர்கள், கொஞ்சம் பால்மாரி விட்டார்களே" என்பர். பலர் அங்கு நடக்கும் சதிர்க் கச்சேரியின் சுவையை அனுபவிப்பர். சில இளைஞர் இத்தகைய விழாக் கூட்டங்களில்

தான் தம் காதலியைத் தேடுவர். பெரியோர், நிவேதனப் பொருள்கள் தம் அந்தஸ்துக் கேற்ற முறைப்படி வருகின்றனவா என்று கவனிப்பர். அய்யரோ அர்ச்சனைப் பொருளிலேயே கண்ணுயிருப்பார். வேறு சிலர், "என்னடா அந்தத் தெரு குட்டி இன்னும் வரவில்லை" என்று ஏங்குவர். இந்த கைய இழிநிலையில்தான் நம்முடைய கோயில்கள் இன்று இருக்கின்றன. இவை யாவும் கடவுள் பெயரால் நடைபெறுகின்றனவே! இது தகுமா? முறையா? அறிவுக்குப் பொருந்துமா? என்று கேட்பது நாத்திகமா? நவிலுங்கள் நாட்டின் எதிர்கால நாயகங்களே!

இறைவனை நிந்திக்கும் இரட்டைப் புலவர் நாத்திகரா?

கடவுளை நாங்கள்தான் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம். நெடுங்காலத்திற்கு முன்னரே உங்கள் இரட்டைப் புலவர்கள் கூறியுள்ளதை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். அவர்களில் ஒருவர் பாடுகிறார் பசியால் மிக நொந்து;

"தேங்கு புகழாங்கூர் சிவனே அல்லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ?"

என்று. நாத்திகம் பேசி நாத்தழும்பேறிய நாங்கள் பசித்திருக்கலாம். ஆனால் சிவ நேசர்களான இரட்டைப் புலவர்கள் பசித்திருக்கலாமா? அதற்கு விடையளிப்பது போன்று மற்றொரு புலவர் பாடுகிறார்.

"......................................போங்காணும்
கூறசங்கு தோல்முரசு கோட்டோசை யல்லாமல்
சோறுகண்ட மூலியர் செல்"

என்று. கடவுள் கேட்கிறார் சோறுகண்ட மூளி யார் என்று. அவர் கண்டது எல்லாம் சங்கின் ஒலி, முரசின் ஓசை முதலியவைதான். சோறு அவர் உண்பதில்லை. ஆகவே உண்மையை எடுத்துக் கூறுகையில், அதை நாத்திகம் என்பது நல்ல தீர்ப்பா? மற்றும் அதே இரட்டையர்கள் வறுமையால் வாடி வருந்தினபோது பாடுகின்றனர்:

"கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்!
கூட்டோடே எங்கே குடிபோனீர்"—என்று.

அதுவும் கூட்டோடே, குடும்பத்தோடே எங்கே போனீர்கள் என்று கேட்கின்றனர். இதற்கு தெய்வத்தின் விடையாக மற்றவர் பாடுகிறார்:

....பாட்டாய் கேள்
செங்கால மெல்லாஞ் செலுத்தினேம் அக்காலங்
கல்லானேஞ் செம்பானேங் காண்—என்று.

தெய்வத்தைக் கல்லும் செம்புமாகக் காண்பதிலுள்ள கயமைத் தனத்தை இது எடுத்துக் காட்ட வில்லையா? இது எத்துணை உண்மையென்று சிந்தியுங்கள்.

ஆகாயவிமானத்திற்கும் வேதத்திற்கும் முடிச்சு

மற்றும் சிலர், நம் நாட்டில் எல்லாம் உளது நமது அதர்வண வேதத்தில் இருந்துதான் ஜெர்மன்காரன் பறக்கும் குண்டு ஆகாய விமானம் முதலியவற்றைத் தெரிந்துகொண்டான். நம் நாட்டில் இல்லாத விமானமா? என்ன என்ன அஸ்திரங்கள் இருந்தன! அக்கினியாஸ்திரம் என்ன! வாயு வாஸ்திரம் என்ன! வருணாஸ்திரம் என்ன! இன்று என்ன புதுமையாய் வந்துவிட்டது? என்று நாட்டைப் பற்றிப் பெருமையோடு பேசுகின்றனர். ஆனால் அந்தப் பழம் பெருமை எங்கே இப்போது? ஏன் அன்னியனிடம் நாட்டைவிட்டு ஆந்தைபோல விழிக்கவேண்டும்? இதனால் உண்மையிலேயே நமக்குப் பெருமையா? இல்லை சிறுமைதான்; சுயமரியாதைக்குப் பங்கம்தான். இது அன்னியனுடன் கொஞ்சிக் குலாவும் அழகிய அணங்கைக் கண்டு அருகில் இருப்பவரிடம், இவள் யாரோ என்று எண்ணுதேயும்; இவள் நம்முடைய மனைவியாக இருந்தவள்தான்! இப்போது இவளை அவன் ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டான். ஆனாலும் என்ன? என்னிடம் இருந்தவள்தானே! இதனால் எனக்கு எவ்வளவு பெருமை? என்று கூறுவதற்குச் சமமாகும் என்பது திண்ணம்.

இனக்கொலை செய்தால் கலைக்கொலை செய்வோம்

மக்கள் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பலப்பல அறிஞர்கள் அரிய பெரிய வேலை செய்தனர். ஆனால் அவர்கள் யாவரும் தோற்றனர்—அடிப்படையை ஆராயாததால். எனவே இளந்தோழர்களே! வருங்கால உலகம் உங்களைத்தான் நம்பியிருக்கிறது. ஆகவே நீங்கள் உங்களுக்கு அளித்துக்கொள்ளும்

நல்ல தீர்ப்பால் இனத்தை எதிர்காலத்திலே எழுச்சியுறச் செய்வீர்களாக! பெரியோர்களே நம்பின காலம் போய்விட்டது. புதுமை இளைஞர்களால்தான் நிகழவேண்டும்; நிகழமுடியும். சீனவிலே சன்யாட்சென், இளைஞர்கள் உதவியால்தான் பழைய சீனவை மடித்தும் புதிய சீனவை உண்டாக்கினர்.

சீனவிலே ஆண்கள் பெண்களேப்போல நீண்ட ஜடை உடையவராக இருந்தனர். சன்யாட்சென் அவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொன்னர். "அது அவசியமில்லே, நீக்கப் படவேண்டும்" என்று அவர்கள் கேட்கவில்லே. கடைசியாக, அவர் இளைஞர்களே அழைத்தார். நீண்ட ஜடையின் அநாகரிகத்தை அவர்களிடம் எடுத்துரைத்தார். கத்தரிக்கோல்களே அவர்களிடம் கொடுத்தார். இளைஞர்கள் நாற்சந்திகளிலே கத்தரிக்கோல்களுடன் நின்றனர். நீண்ட ஜடைக்காரர்கள் போவர்; போகவிட்டுப் பின்னல் சென்று அவர்களின் ஜடைகளே இந்த இளைஞர்கள் கத்தரித்து விடுவர். இவ்வகையில் பழைய சீன மாண்டது. இப்படியே ஆங்குள்ள கலேவாணர்களேச் சன்யாட்சென் அழைத்தார். சீனவில் அந்தக் காலத்தில் பல கடவுளர்கள் இருந்தனர். அக்கடவுள்களின் நீண்ட பட்டியலேத் தயாரித்தார். கலேவாணரையும் பிறரையும் நோக்கி, இத்தனேக் கடவுள்கள் வேண்டுமா? என்று கேட்டு அவை தேவையில்லே என்பதை விளக்கமாய் எடுத்துக்காட்டி ஒரே ஆண்டவனே வழிபடுமாறு செய்தார். ஐரோப்பாவின் நோயாளியாகக் கருதப்பட்ட துருக்கி இன்று தலேநிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் கமால் பக்ஷா இளைஞர்கள் உதவியைப் பெற்றதாலேதான்.

தோழர்களே! நீங்கள் நல்ல தீர்ப்பு அளியுங்கள். இன்று மக்கள் சமுதாயத்தை மாற்றவல்ல தீர்ப்பு, மனிதனே மனிதனுக வாழவைக்கும் தீர்ப்பு, வினைகளே வீழ்த்தும் தீர்ப்பு, விதியை விரட்டும் தீர்ப்பு, அளியுங்கள். அதை அமுலுக்குக் கொண்டு வாருங்கள்! அதற்குத் தடையாகக் கடவுளே வரினும் கலங்காதீர்! சிவனே வரினும் சிதருதீர்! மதமே வரினும் மயங்காதீர்! கலே கலே என்று இனக்கொலே செய்தால் கலேக் கொலே செய்யுங்கள்! அடிமை வாழ்வை அறுத்தெறியுங்கள்! மானமே பெரிதென மதியுங்கள்! சிந்தித்து நல்ல தீர்ப்புக் கூறுங்கள்! செயலில் காட்டுங்கள்!! வணக்கம்.